ஆனால் அதே பம்ப் செட்டை வெளியில் இருக்கிற ஏஜண்டு மூலம் வாங்கினால், அதாவது கிர்லோஸ்கர், பி. எஸ். ஜீ. இவைகளிடம் வாங்கினால் ஆயிரம் ரூபாய், ஐந்நூறு ரூபாய் குறைவாகக் கிடைக்கிறது. குறிப்பிட்ட பம்ப் செட்டை, அங்கீகரிக்கப்பட்ட பம்ப் செட்டை எந்தக் கம்பெனியில் வாங்கினாலும் மானியம் வழங்கப்படவேண்டும் என்று இதற்கான உத்திரவு வழங்கப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல உணவுத் துறையில் எல்லாக் கிராமங்களுக்கும் குடும்பக் கார்டு வழங்கப்படும் என்று சொல்லப்பட்டாலும், ஒரு சில கிராமங்களுக்கு வழங்கப்பட்டு மற்ற சில கிராமங்களுக்கு வழங்கப்படாத நிலை இருக்கிறது. ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரை, எல்லா கிராமங்களுக்கும் குடும்பக் கார்டு வழங்கப்படவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இந்த அளவுடன் முடிவுற்று, திங்கட்கிழமை 24—3—1975 அன்று காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

(5) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

147. Notification issued in Roc. No. 188040/74-E4, Director of Rural Development, dated the 15th December 1974 in regard to extension of certain provisions relating to Building Regulations under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Thiruvalam Panchayat, North Arcot district. (*Laid on the table of the House under section* 199 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958 [*Tamil Nadu Act XXXV of* 1958].

B. *Reports, Notifications and Other Papers.*

@ 99. Policy Note on Demand No. 56—Miscellaneous Capital Outlay—(Craftsmen Training Schemes) (English).

@ 100. Speech by Hon. Thiru S. Madhavan, Minister for Food and Co-operation on the Food Demand (English).

@ 101. The Performance Budget on Handloom and Textiles, 1975–76.

---

* Cut motions circulated separately.

@ Despatched to members on 20th March 1975.